## அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திருமதி ரா.நாகஜோதி

ந.க. எண்:-01/2024

நாள் :- 15.03.2024

பொருள்:-- குடியிருப்பு மனைப்பிரிவு — அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கஞ்நாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண் 81/1A&81/2A1Aல் 8418.00சதுர மீட்டர் பரப்பு (2.08 ஏக்கர்) —மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் அளித்து உத்திரவு வழங்குதல் -தொடர்பாக.

பார்வை

1. அரசாணை எண் 71 ஊ.வ.துறை நாள்:-16.5.2003
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களின் கடிதம் ந.க. எண்33/2024 நாள் 01.03.2024
3. தலைவர்கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்
4. சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
5. அரசாணை நிலை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை 4(3) 04.5.2017

ஆணை

1-ல் பார்வை காணும் அரசாணை மற்றும் பார்வை 2-ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண்:- 81/1A&81/2A1Aல் 8418.00சதுர மீட்டர் பரப்பு 2.08 ஏக்கரில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 3-ல் தெரிவித்துள்ளபடி ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் கடிதம் படி பத்திரப் பதிவு நாள் 989/2024- கஞ்சாநயக்கன்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் பெயரில் தமிழ்நாடு அரசுக்கு தானமாக வழங்கப்பட்ட சாலை, மூலை முடுக்குகள்அனைத்தும் ஊராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது பார்வை-4-ல் காணும் கடிதத்தின் படி மொத்த நிலப்பரப்பிற்கான (8418 ச.மீ) நிலப்பயன மாற்றுக்கட்டணம் 1899-ம் ஆண்டு இந்திய முத்திரைச்சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உடற்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில்3%தொகைரூ.532830/(ஐந்துலட்சத்துமுப்பத்திஇரண்டுஆயிரத்திஎண்ணூற்றி

முப்பதுமட்டும்) -0217-60-800-AS-22709 என்ற கணக்கு தலைப்பில் 12.03.2024-ல் செலுத்தப்பட்டுள்ளது.மேலும்வளர்ச்சிகட்டணம்தொகை:2500/(இரண்டுஆயிரத்துஐந்துநூறு மட்டும்)கூராய்வுரூ1000/- வீதம் 46 மனைகளுக்குரூ.46000/- (நாற்பத்திஆறுஆயிரம்மட்டும்) கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி பொதுநிதி கணக்கு தலைப்பில் 15.03.2024-ல் செலுத்தப்பட்டு ரசீது நகல் பெறப்பட்டுள்ளது. அருப்புக்கோட்டை வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி சர்வே எண்:- 81/1A&81/2A1Aல் 8418.00சதுர மீட்டர் பரப்பு 2.08 ஏக்கரில் அமையும் 46 குடியிருப்பு மனைகளுக்கான வரைபடத்துக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபட ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது:

மனை எண்:- 1-46 =46( சாதாரண மனைகள்)

மொத்தம் 46 மனைகள்

1) மனைகள் மற்றும் தெரு அங்கீகரிக்கப்பட்டு ம.வ/ந.ஊ.து.இ(விருமா) எண் 33/2024 என எண்ணிடப்பட்ட வரைடபத்தின்படி எல்லைக்கற்களால் வரைறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுகள் வரும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு நகராட்சி கட்டிட விதிகள் 1972-ன்படி ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கேற்ப தார் கற்களை கொண்டு மனுதாரரால் அமைக்கபடவேண்டும்.

2)அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால் துப்பரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேப மனுதாரர் அமைத்துத்தர வேண்டும்.

இ. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

ஈ. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர்கள்/ உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தை செலுத்தி தலைவர், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சிக்கு உரிய படிவத்தை பதிவு செய்து பொதுச்சாலையாக பராமரிக்க தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உ. மேற்படி சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் தலைவர், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சிக்கு செலுத்துதல் வேண்டும். இதை நடை முறைப்படுத்த

Token No.

மனுதாரர்களிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையை பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாராரின் கையொப்பம் பெற வேண்டும் மேலும், உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகள் நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்வோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தபட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயனபடுத்தப்பட வேண்டும். இந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்துகொள்ள வேண்டும்.

5. விரிவு அபிவிருத்தித் திட்டம் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்படவேண்டும். ஒருபக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்படவேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனையில் அங்கீகரிக்கப்பட்ட அளவினைணேயா அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக்கூடாது.

6. அங்கீகரிக்கபட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7மீ(23அடி) சாலைக்கு 1.5 மீட்டரும்(5அடி) 9மீ (30அடி) அகல வரையிலான சாலைக்கு 3.0மீட்டருக்கு (10அடி) 12 மீட்டருக்கு ( 40அடிக்கு) மேல் மற்றும் 15மீ (50அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3மீட்டர் (10அடியும்) 15மீட்டருக்கு (50அடி) அகலத்திற்கு மேலும் 21 மீட்டருக்கு (70அடி) அகலத்திற்குட்பட்ட

சாலைகளுக்கு 4.5மீ (15.0") அடியும் 21மீ (70அடி) மேல் 24 மீட்டரும் (80அடி) அகலம் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6.0மீ (20அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீ (6அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி 2.4 மீ(8.0) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது

7. மனையின் பக்க எல்லைக்கும் கட்டித்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுள்ள திறந்த வெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3மீ திறந்தவெளி விடப்படவேண்டும். 10மீ வரை மனயின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி ஒரு பகக்கத்திலாவது குறைந்தது 15.மீ விடப்படவேண்டும்.

8. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மீ அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும் இந்தப்பின்பக்கத் திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை எருக்குழி மாட்டுத்தொழுவம், உந்து வண்டி நிறுத்தம் கொட்டகை போன்றவை அல்லது இவை போன்ற குடியிருப்பு அல்லது ஆனால் கடடிங்கள் மட்டுமே அமைக்கப்படலாம் ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்கம் நில மட்டத்திலிருந்து 3மீ/3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9. விரிவு அபிவிருத்திக்கு திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக்கூடாது கட்டிடம் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ திறந்த முற்றுமாவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காவோ துப்பரவாக பரமரித்தல் லேண்டும்.

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்படவேண்டும்.

11. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிமாக தரையை சமன்படுத்தவோ நிலச்சரிவை சரி செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

12. 9மீட்டர் அகலத்திற்கு அதிமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தார்போல் அடுத்தடுத்து 9 மீட்டர் துாரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்பட்வேண்டும்

13. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்பாக கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சித் தலைவர்/ வட்டார வளர்ச்சிஅலுவலர் ( கி.ஊ) அவர்கள் ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

14. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனையை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும்.

15. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம்/ இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

16. பூங்கா, சிறுவர் விளையாடுமிடம் திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

17. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப்பாதை/ தந்திக்கம்பி பாதை அமைந்தால் கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்தள்ளவாறோ மாற்றிமைக்க வேண்டும்.

18. மனையின் சொந்தகாரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலம் ஊராட்சி மன்றத் தலைவர் உடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுபடுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்படவேண்டும்.

19 மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப ஒப்புதல்.

அ) (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டு உள்ளது. என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் மனையின் உரிமையாரே அதற்கு முழு பொறுப்பேற்க வேண்டும்.

ஆ) தமிழ்நாடு நகர்புற நில உச்ச வரம்புச்சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விவரத்தினை தொடர்புடைய உச்ச வரம்பு சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ) மனைப்பிரிவு இடம் 1984ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்புச்சட்டம் 1979 மற்றும் நிலச்சீருத்தச்சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக தலைவர் மன நிறைவு அடைந்த பின்னரேதான் மனைப்பிரிவிற்கு ஊராட்சியில் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ff) மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலையில் நடவடக்கையின் நகலினை இவ்வலுவகத்திற்கு உடன் அனுப்பவேண்டும்.

உ) மேலும் மேற்படி சட்டங்களின் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதம் பட்டியல் (Land Plans Schedule) எதுவும் பரிசிலனைக்குப் பெறப்படவில்லை. என்பதனையும் மறைநிறைவு அடைந்த பின்னர் தான் மனைப்பிரிவிற்கு ஊராட்சி மன்றத் தலைவரால் அங்கீகாராம் வழங்கப்படவேண்டும்.

20 மனுதாரர் தலைவர் கஞ்சநாயக்கன்பட்டி/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அருப்புக்கோட்டை ஒன்றியம் அவர்களிடம் வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மனம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்படவேண்டும்.

21. மனுதாரர் சமர்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசிலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊராமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

22. மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கிய பின்போ, மனைகளை விற்றபின்போ வில்லங்கம் அல்லது தாவா ஏதேனும் ஏற்படின் அதற்கு இவ்வுத்தரவு பொருந்தாது மேலும் நீதிமன்ற வழக்கிற்கும் இவ்வுத்தரவு பொருந்தாது.

23. இவ்வலுவகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொது மக்கள் பார்வைக்கு சம்பந்தபட்ட இடத்தில் 6அடி*4அடி என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்படவேண்டும்.

24. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைப்பிரிவு வரைபடம் நகல் வழங்கப்படவேண்டும்.

| | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 2.08 ஏக்கர் 8418 ச.மீ | |
| மொத்த மனைகள் | 46 மனைகள் | |
| உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியது | 28.76ச.மீ | 0.51% |
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகர்மான கழகம் (TANGEDCO) உபயோகத்திற்கு | 28.76 ச.மீ | 0.51% |
| மனுதாரர் விறபனைக்குரியது | | |
| கடை | 57.52 ச.மீ | 1.02% |

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி கிராமம், சர்வே எண்:- 81/1A&81/2A1Aல் 8418.00சதுர மீட்டர் பரப்பு 2.08 ஏக்கரில் அமையும் 1 முதல் 46 வரையிலான மொத்தம் 46 குடியிருப்பு மனைகளுக்கு கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி மூலம் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

R.Nagaraj
15/3/24
தலைவர்
கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி
இரண்டாம்நிலை ஊராட்சி
கஞ்சநாயக்கன்பட்டி

பெறுநர்:-

திரு.வெ. ராமமூர்த்தி
வடக்குதெரு கஞ்சநாயக்கன்பட்டி
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

நகல்

2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
விருதுநகர் மாவட்டம்.

2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம்